27596

# மோட்டார்
# ஒப்பாரி



19292

A. பாபு அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

கடவுள் துணை.

# மோட்டார் ஒப்பாரி

விருத்தம்

முக்கண்ணன் தன்மகனே மோஷிகவாகனரே
முத்தித்தருவாயென்று சித்தத்தில் நான் நினைத்து
மோட்டாரின் ஒப்பாரிதனை பாடுதற்கு
முனைசுழிகளில்லாமல் முடிவுரை வேணுமையா

ஆதியில் சீமையிலே என்னைபெத்ததொரு அம்மாடி
இந்த அதிசயத்தை கண்டதில்லை
சீமைதுரையாலே என்னைபெத்ததொரு ஆச்சிகளா
செய்துவைத்தார் காருவண்டி

காருவண்டி லக்ஷணமும் என்னபெத்த சதிகாரி
அந்த கலருவைத்த சேர்த்திகளும்
காசினியாரோரிவா என்னைபெத்ததொரு ஆச்சிகளா
கனசீட்டு மெத்தைகளும்

கானலடிக்காத எங்கள் கனத்தமுடி ராசாவே
கமான் வளைத்த டாப்புகளும்
கைதிலுப்பஸ்டேரிங்கியும் என்னைகொண்ட மணவாளா
கலர்கொடுத்த லக்ஷணமும்
மாடுகட்டி ஓட்டாத என்னைகொண்ட மணவாளா,
மாயப்புரவியைப்போல்

மாயப்புரவியைப்போல் என்னைபெத்ததொரு அம்மாடி
மானிடர்க்கு தீம்புவைத்தார்

டப்புடுப்புசத்தார் வைத்தாம்என்னைபெத்த சதிகாரி
தாரணியில் தெரியவைத்தார்
தாரணியார் தானறிய என்னைபெத்த சதிகாரி
டிரைவராலே ஓட்டிவைத்தார்

சீமையிலே தானறிய என்ராஜாவே மறந்திரியே
சென்னை சீமான் தானெழுதி
சீமைதுரைமார்கள் என்னைபெத்த சதிசாரி
சென்னையிலே ஷாப்புவைத்தார்

பட்டணத்துஷாப்பிலே என்னைபெத்த சதிகாரி
பார்முழுதுங் காராச்சு
காரோட்டும் டிரைவராலே என்னைபெத்ததொரு அம்மாடி
கனத்தகுலே எங்குமாச்சு

காருஎங்கும் ஜாஸ்தியாச்சு என்கமலவல்லியம்மாடி
கால்நடைகள் மீதியாச்சு
காரோட்டும் டிரைவர்களே என்னைபெத்த அம்மாடி
காலியென்று என்னுமல்

கொடும்பாவி டிரைவருக்கு என்னைபெத்ததொரு ஆச்சிகளா
கொடுத்தீர்கள் சம்மதித்து
குயில்மொழியை கொண்டவரும் என்ராஜாவே மந்திரியே
கொண்டுபோனர் காருஓட்டி

காருஓட்டிபோன மன்னன் என் தருமதுரை ராஜாவே
ரோம்பகாதவழி போனதினுல்
காரோடுகாருமுட்டி அடி என்னை பெத்ததொரு ஆச்சிகளா
என் கணவன்தலே தூளாச்சு

காசிக்குபோனதுண்டு என்ராஜாவே மந்திரியே
கைவிளக்கு தொட்டதுண்டு
கைவிளக்கு தொட்டதோஷம் என்ராஜாவே மந்திரியே
என் கணவனுக்குப் பட்டுவிட்டு

மதுரைக்குப்போனதுண்டு என்ராஜாவே மந்திரியே
மணிவிளக்கு தொட்டதுண்டு
மணிவிளக்கு தொட்டதோஷம் என்ராஜாவே மந்திரியே
என் மன்னவனுக்குப் பட்டுவிட்டு

காருமுட்டி மாண்டசேதி கம்பகோரட்டு அப்பாவும்
கனசேதி கேட்டவுடன்
காலாளுஞ்சேகுவரும் என்னைக்கொண்டமன்னவரை
கச்சேரிக்கே தூக்கிவந்தார்

கோரட்டார் தான்பார்த்துஐய்யோ என்னைகொண்டராஜா
கொடும்பாவி முண்டைக்கி [வின்
கொண்டவனர் மாண்டசேதி இந்த சதிகார முண்டைக்கு
குறையெழுதி ஆளுவிட்டார்

தந்திபோல்சேதிகொண்டு என்னைபெத்த அம்மாடி
சலிதியிலே ஆளுவந்தார்
தந்திகவருடைத்து அடிகாரனேசதிகாரி
தந்தியின் சேதிகேட்டேன்

கடிதத்தைவாசித்த அடிகாரனே சதிகாரி
காரணத்தை பார்த்திருக்க
காரோடுகாருமுட்டி என்னைகொண்டமன்னன்மேல்
காரேரிசெத்தவிதம் கடிதத்தில் தானிருக்க

புருஷனிறந்தசேதி என்ராஜாவே மந்திரியே
பெண்ணாளும் தான்கேட்டு

புழுதிபிரண்டோட அந்தமுத்துபெற்ற ரத்தினமும்
புலம்பி யழுகலுற்றான்

சுத்திமதிலெழுப்பி என்னைதேடிய ராஜாவே
சுந்தரரை காவல்வைத்தீர்.
சுத்திமதிலிடியோ என்னைதேடிய ராஜாவே
சுந்திரர்சொல்லுரது என்சித்தம் பொருக்கலையே.

பக்கமதிலெழுப்பி என்னைதேடிய ராஜாவே
பரண்டியனைக் காவல்வைத்தீர்
பக்கமதிலிடியோ என்னைதேடிய ராஜாவே
பாண்டியர்சொல்லுரது யென்பக்கம் வருகுதங்கே

பாப்பாரசாதியிலே பத்துலக்ஷம்பெண்களுண்டு
கோமுட்டிசாதியிலே கோடிலக்ஷம்பெண்களுண்டு
செங்குந்தர்சாதியிலே சேனபெண்கள் லக்ஷமுண்டு
ராஜவம்சங்களிலே நாலுலக்ஷம்பெண்களுண்டு
வன்யஜாதியிலே வேணலக்ஷம் பெண்களுண்டு
நான் வேளாளபெண்பிறந்து நான் நாட்டுரசகுண்டு
கலங்குலைய சம்மதமோ

மாமரத்துக்கீழிருந்து யென்னைபெத்தாளே ஆச்சிகளா
மனக்குறையே சொன்னேனானல்
மாங்காயுதிர்ந்திடுமே யென்னைபெத்தாளே ஆச்சிகளா
மாமரமும் சாய்ந்திடுமே
மாமரத்துமேலிருக்கும் யென்னைபெத்தாளே ஆச்சிகளா
மயிலும் திடுக்கிடுமே

பூமரத்துக்கீழிருந்து யென்னைபெத்தாளே ஆச்சிகளா
பெண்குறையை சொன்னேனானல்
பூவும்வுதிர்ந்திடுமே யென்னைபெத்தாளே ஆச்சிகளா
பூமரமும் சாய்ந்திடுமே

பூமரத்துமேலிருக்கும் என்னைபெத்தாளே ஆச்சிகளா
புருவும் திடுக்கிடுமே

கோடிதனவானும் என்னைபெற்ற தாய்தகப்பன்
குவலயத்தில் சீமானும்
குண்டுமணிபோல் பெண்ணாய் யென்னைபடைத்த பிர்மாவும்
குணத்தை மறைத்து வைத்தான்

சாதம்சமைத்துவைத்து யென்னைகொண்ட புண்ணியற்கும்
சாம்பார் குழம்புவைத்து
பூசனிக்காய் மோர்குழம்பு புடலங்காய் துவட்டலுடன்
லாடுரவாலாடு நல்லசாம்பார் குற்குந்தாம்

அப்பளம் போளிவடை அதிரசமும் பாயாசம்
இத்தனையும் தான்புசித்து
யென்னைகொண்ட மன்னவனும்
ஏறிபோனார் காருமேலே

உள்ளூருதட்டான் யென்ராஜாவே மந்திரியே
உருவுவைத்து தாலிபண்ணி உருவையகட்டணுமோ
தங்கநிறமே தனூர்சேர்ந்த பாண்டியரே
செங்கழுநீர் தன்குலையே ஜெகமெச்சும் ராஜாவே
உருங்கழுத்தா ஆகணுமோ

அஞ்சாருதட்டான் யென்ராஜாவே மந்திரியே
ஆணிவைத்து தாலிபண்ணி ஆணியகயட்டணுமோ
சித்திரத்துணே சிலையேந்தும் மாதுனையே
புத்தியிற்சிறந்தவரே புண்ணியரே ராஜாவே
அரகழுத்தி யாகணுமோ

கோரட்டு தேடியல்லோ என்ஜோடு பெண்டுகளா
குலாவிவழி நடக்கையிலே

பக்கமரங்களா பனைமாத்து ஜோடிகளா
ஈச்சமரங்களா இருபுறத்து ஜோடிகளா

அரசுவேம்பு தேக்குகளா அமர்ந்திருக்கும் கிளைகளா
சிட்டுகுருவிகளா சேர்ந்திருக்கும் பக்ஷிகளா
மயில்குயில் ஆந்தைகளா மானிலத்து பக்ஷிகளா
மங்கைபுலம்புறது என்நாட்டு பறைவகளா
கானிலத்து வண்டினங்கள் நீங்கள்
கடுங்கி கலங்க வேண்டாம்

கன்னிகலங்குறது அடியென் ஜோடி பெண்டுகளா
இந்த காரணத்தை பார்க்கலாமோ
கட்டுக்கழுத்திகளா கம்மிகாட்டி பெண்டுகளா
சட்டம்போல் பிள்ளைகளா என் சைசான தங்கைகளா
ஆத்தாளும் அக்காளும் அடுக்கடுக்கா பார்ப்பவரும்

மாமிகளா கொளுந்திகளா மகராசி பெண்டுகளா
மங்கைகலங்குறது என்ஜோட்டுபெண்டுகளா
உங்களனைவருக்கும் சம்மதமோ
கூட்டத்தை கண்டவுடன் என்னைபெற்ற ஆச்சிகளா
கூக்குரலும் போடலுற்றாள்

மரத்திலேமுட்டுவதும் மண்ணிலேபோய் மோதுவதும்
கிட்டயிருந்து பார்ப்பவர்கள் எட்டிபிடிக்கிறதும்
முட்டியுடைவதும் முகத்திலரையுவதும்
கையைமுரிக்கிறதும் கன்னத்திலரையுவதும்
பார்த்தோர்கலங்கியப்போ இந்தபெண்ணாள் கோலத்தை
பயந்தோடி நிற்கிறார்கள்

சந்தணமேடையிலே என்னை கொண்ட மன்னவரும்
சார்ந்திருந்து காரோட்ட

என் கோரட்டு ஐயாவே குவலயத்து ராஜாவே யென்
சாமியை பார்க்கணும் சலுதியிலே வழிவிடுங்கோ

குங்குமமேடையிலே யென்சாமிதுரைராஜாவுங்
குந்திருந்து காரோட்ட
யென்கோரட்டு அய்யாவே குவலயத்து அப்பாவே முன்
கூட்டம் விலக்கிடுங்கோ யென்னைகொண்டவரைப் பார்க்க
[வேணும்

அத்தருமேடையிலே யென்சாமிதுரை ராஜாவும்
அமர்ந்திருந்து காரோட்டும்
யென்கோரட்டார் சேகுவரேகுந்திருக்கும் அப்பாவே யென
ஆளனைப்பார்க்கவேணும் அதட்டிவிலக்கிடுங்கோ

ஸ்டேரிங்கியை கைபிடித்து யென்சாமிதுரை அய்யாவும்
சீமைதுரை போலிருப்பார்
கூட்டம் நிறைந்தவரே கும்பினியார் சேகுவரே
தள்ளிவிலக்கிடுங்கோ என்தர்மரை போய்பார்க்கவேணும்

கோட்டுகாலர்பூர்சுமாட்டி என்னைகட்டிவிட்டமன்னவரும்
குந்திசாய்ந்து போனவரை
தருமதுரை அய்யாவே ஜர்ஜிவிட்டதூதவரே முன்
கெட்டிவிலக்கிடுங்கோ என்கேசரைப் பார்க்கவேணும்

செண்டுகமகமங்க என்மன்னர்துரை புண்ணியரும்
சிங்காரமாய் குந்திருப்பார்
என் வட்டுதுரைமாரே இன்ஸ்பெக்டர் சாமிகளே
சவத்தைமுகம் காட்டிடுங்கள் சுந்திரரை பார்க்கவேணும்

முக்காடு தூக்கியல்லோ நான்பாவி சதிகாரி
முகம்பார்த்தும் திகிலடைந்து
கட்டிணைக்கிறதும் கன்னம் கடிக்கிறதும்

கிட்டே படுக்கிறதும் கிள்ளிமுகம் பேர்க்கிறதும்
பக்கம் படுக்கிறதும் பல்லால் கடிக்கிறதும்
சேர்த்து அணைக்கிறதும் சேர்ந்ததை சொல்வதும்

வாரிசேர்த்து தூக்குவதும் வாயிலடிக்கிறதும்
பக்கம் ஜனங்களெல்லாம் தேம்பி அழுகிறதும்
சேர்ந்தஜனங்களெல்லாம் பதரி அழுகிறதும்
தூரஜனங்களெல்லாம் துக்கம்கொண்டு நிற்கிறதும்
கச்சேரிதுரைமார்கள் கலங்கிமனம் வாடுகிறதும்
பக்கம் இழுத்துவிட்டு தருமதுரை கோரட்டாரும்
பயமுறுத்தி நிற்கவைத்தார்

கோரட்டார் தான்பார்த்து அடியரைவருட பெண்சாதி
நீ கூக்குரலே செய்யாதே
கொண்டபுருஷனிட கொழுந்தன் சாமி
பெற்றவர்க்கும் உன்னுடைய தாய்தகப்பன்மார்

உடனேவர தந்திதந்தார்
அறைப்பட்டடிரைவருட ஆத்தாள்மாமி
ஆசையுள்ளநேசர்களும் வந்தார்உடனே
கோரட்டார் தான்பார்த்து

அடிய்ரைவருட பெண்சாதி நீ
கொண்டபுருஷனை தகனம்செய்ய உத்திரவுதந்தார்
உத்திரவுவந்தவுடன் எல்லோருங்கூடி
அறைப்பட்ட டிரைவரை கொண்டுவந்து தகனம்செய்தார்

முற்றிற்று.

---

V. Press Madras

வில்லிபாரத வசனம் அல்லது
மகா பாரத வசன சங்கிரகம் விலை ரூ. 3
(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

பாரதம் ஆதிமுதல் அந்தம் வரையில் இடையில் எவ்வித உபகதையும் விடாமல் படிக்கத் தெள்ளிய தமிழ் வசன நடையில் தமிழ்ப் பண்டிதரும், 'கம்ப நாடர்' ஆசிரியருமான மோ. வே. கோவிந்தராஜ ஐய்யங்காரவர்களால் புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அநேக அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு நூதன முறையில் வெகு அழகான காலிகோ கட்டடம் செய்யப்பட்டிருக்கிறது. வாசகசாலைக்கும், பரிசளிப்பதற்கும் இன்றியமையாதது.

பிரபஞ்ச விநோதக் கதைகள் விலை ரூ. 1

படிக்கப் படிக்க இனிமை அளிப்பது. இப்பிரபஞ்சத்தில் நடக்கும் அதி விநோதமான செய்கைகள் பலவும் விளக்கப்பட்டிருப்பது. அதி உன்னதப்பேர்க்கு. அழகிய கதைகள்.

இதில் அடங்கியுள்ள கதைகளாவன:—

1. பந்தயத்தால் மனைவியை இழந்தது 2. பெண்ணால் மோசம்போன சாஸ்திரி 3. முகஸ்துதியால் ஏமாந்த கோடீசுவரன் 4. ஐந்து சகோதரிகளின் தந்திரம் 5. மூன்று காதலர் காதலிகளின் பரிதாபம் 6. வஞ்சகன் வலையில் மடமான் 7. ஒரு காதல் கலியாணத்தின் நேர்மை 8. காதல் வேட்டை 9. செல்வியின் தந்திரம் 10. காமுகனுக்குப் படிப்பினை.

தமிழ் புத்தகங்கள் முற்றுமடங்கிய விலை விவர ஜாபிதா வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,
நெ. 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.